## 7.2 அடிப்படை விதி 56(2)ன் கீழ் கட்டாய ஓய்வுக்கான ஆய்வு – துறைத் தலைமை அலுவலகங்களிலுள்ள 'இ' மற்றும் 'ஈ' பிரிவு அலுவலர்களுக்கான கட்டாய ஓய்வு குறித்தான பொதுவான ஆய்வுக் குழுவை அமைத்தல்

---

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (ஆர்) துறை

அரசாணை (நிலை) எண். 16 நாள் : 27.1.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.623, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆர்) துறை, நாள்.14.7.83.
2. கடித எண்.24658/பொது1/99–6, பொதுத்துறை நாள்.7.7.99.

**ஆணை:**

2.7.99 அன்று நடந்த துறை செயலர்களின் மாதாந்திர கூட்டத்தில் அடிப்படை விதி 56(2)–ன்கீழ் கட்டாய ஓய்வு குறித்த நடத்தப்படும் ஆய்வை நீக்குவது அல்லது மாற்றியமைப்பது தொடர்பாக சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை செயலரால் கருத்துரு வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. கட்டாய ஓய்வுக்கான ஆய்வு தொடர்பான தற்போதைய நடைமுறைகள் குறித்தும் ஆய்வுக் குழு குறித்தும் பரிசீலனை செய்து தகுந்த மாற்றங்களை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பரிந்துரைக்குமாறு மேற்படி கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அவ்வாறே இப்பொருள் குறித்து தீவிர பரிசீலனை செய்யப்பட்டது.

2. அரசாணை (நிலை) எண்.623, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்.14.7.83ல் அரசு அலுவலர்களில் தொகுதி 'அ' 'ஆ' 'இ' மற்றும் 'ஈ' பணியாளர்களை அவர்களது 50 வயது முடிக்கும் தேதி (அடிப்படை பணியாளர்களுக்கு 55 வயது) அல்லது 30 வருட பணியினை முடிக்கும் தேதி, இவற்றில் எது முன்னர் வருகிறதோ, அந்த தேதிக்கு ஆறு மாதத்திற்கு முன்பாகவே அடிப்படை விதி 56(2)–ன்கீழ் கட்டாய ஓய்வு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு ஆய்வு மேற்கொள்ள 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்களுக்கென பொதுவான ஆய்வுக்குழு, அரசாணை நிலை எண்.623, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள்.14.7.83–ல் பிற்சேர்க்கை 11–ல் நிர்ணயிக்கப்பட்டவராலும், 'இ' மற்றும் 'ஈ' தொகுதி பணியாளர்களுக்கு, ஒவ்வொரு துறைத் தலைமை அலுவலகங்களின் துறை வாரியாக தனித்தனியாக ஆய்வுக் குழுக்கள் மேற்கண்ட அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலான துறைகளுக்கான ஆய்வுக்குழுக்களில் உறுப்பினர் அந்தந்த செயலகத் துறைகளிலுள்ள கூடுதல் / இணை / துணைச் செயலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3. ஆய்வுக்குழு பரிந்துரையில் 'இ' மற்றும் 'ஈ' தொகுதி அரசுப் பணியாளர்களைப் பணியில் தொடர அனுமதி வழங்கும் இனங்களில் துறைத் தலைமை அலுவலர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கலாம் எனவும், அதற்கேற்ப அரசு ஆணை நிலை எண்.623, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.14.7.83–ல் பிற்சேர்க்கை III (C)–ல் துறைத் தலைமை அலுவலர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட ஆய்வுக் குழுவைக் கீழ்கண்டவாறு மாற்றியமைக்கவும் பரிசீலனை செய்யப்பட்டது,

| ஆய்வுக்குழுத் தலைவர் | ஆய்வுக்குழு உறுப்பினர் |
|---|---|
| துறைத் தலைமை அலுவலகங்களிலுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் (Second Level Officers of Head of Department)<br>(அதாவது கூடுதல் இயக்குநர் / கூடுதல் ஆணையர் அல்லது இணை இயக்குநர் / இணை ஆணையர்) | 1. மூன்றாம் நிலை அலுவலர்கள் (Third Level Officer) துணை இயக்குநர் / துணை ஆணையர்.<br>2. நான்காம் நிலை அலுவலர் (Fourth Level Officer) உதவி இயக்குநர் / உதவி ஆணையர். |

4. மேலும் துறைத் தலைமை அலுவலகங்களில் கூடுதல் இயக்குநர் / கூடுதல் ஆணையர் பணியிடம் இல்லையென்றால் அதற்கடுத்த நிலையிலுள்ள இணை இயக்குநர் / இணை ஆணையர் அல்லது துணை இயக்குநர் / துணை ஆணையர், ஆய்வுக்குழுவின் தலைவராக பணியாற்ற வேண்டும். மேற்கண்ட ஆய்வுக்குழுக்களால் ஆய்வு செய்யப்படும் நபர் பணியில் தொடரலாம் என்று அளிக்கப்படும் பரிந்துரை மீது துறைத் தலைமை அலுவலர்களே முடிவெடுக்க அனுமதிக்கலாம் எனவும், ஆய்வுக் குழுவின் பரிந்துரை, அரசுப் பணியாளரரைக் கட்டாய ஓய்வில் செல்ல பரிந்துரைக்குமானால், தற்போதுள்ள ஆணைகளின்படி சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைக்கு அனுப்பப்பட்டு பணியாளர்

மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையுடன் கலந்து மாண்புமிகு முதலமைச்சரிடம் ஆணை பெற்ற பின்னரே கட்டாய ஓய்வுக்கான ஆணை வெளியிடப்பட வேண்டும் எனவும் பரிசீலிக்கப்பட்டது.

5. மேற்கூறிய கருத்தினை அரசு தீவிர பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே துறைத் தலைமை அலுவலகங்களிலுள்ள 'இ' மற்றும் 'ஈ' பிரிவு தொகுதி பணியாளர்களை அடிப்படை விதி 56(2)–ன்கீழ் ஆய்வு செய்ய கீழ்கண்டவாறு பொதுவான ஆய்வுக் குழு அமைக்கவும் அரசாணை நிலை எண்.623, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்.14.7.83–ல் உள்ள பிற்சேர்க்கை III (C)–ஐ நீக்கிவிடவும் ஆணை வெளியிடப்படுகறிது.

| ஆய்வுக்குழுத் தலைவர் | ஆய்வுக்குழு உறுப்பினர் |
|---|---|
| துறைத் தலைமை அலுவலகங்களிலுள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் (Second Level Officers of Head of Department)<br>(அதாவது கூடுதல் இயக்குநர் / கூடுதல் ஆணையர் அல்லது இணை இயக்குநர் / இணை ஆணையர்) | 1. மூன்றாம் நிலை அலுவலர்கள் (Third Level Officer) துணை இயக்குநர் / துணை ஆணையர்.<br>2. நான்காம் நிலை அலுவலர் (Fourth Level Officer) உதவி இயக்குநர் / உதவி ஆணையர். |

குறிப்பு :– அரசுப் பணியாளர்களின் பணியமைப்பு (Establishment) கவனிக்கும். அலுவலர்களில் உள்ள இரண்டாம் / மூன்றாம் / நான்காம் நிலை அலுவலர்கள்.

ஆய்வுக்குழுவின் தலைவர் / உறுப்பினர்களாகப் பணியாற்றுவார்கள். துறைத் தலைமை அலுவலகங்களில் கூடுதல் இயக்குநர் / கூடுதல் ஆணையர் பணியிடம் இல்லையென்றால் அதற்கடுத்த நிலையிலுள்ள இணை இயக்குநர் / இணை ஆணையர் அல்லது துணை இயக்குநர் / துணை ஆணையர், ஆய்வுக்குழுவின் தலைவராக பணியாற்ற வேண்டும். அந்நிலையில் மூன்றாம் நிலை அலுவலர்கள் இருவர் (அதாவது, ஒருவர் மூன்றாம் நிலை அலுவலரின் பணியமைப்புக் கவனிப்பவர், மற்றொருவர் மூத்த மூன்றாம் நிலை அலுவலர்) ஆய்வுக் குழு உறுப்பினர்களாகப் பணியாற்றுவார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எ.பி.முத்துசாமி**
அரசு தலைமை செயலாளர்